[1970 மார்ச்

தொழிற் பேட்டைகளை அமைக்க அரசு முடிவு செய்திருக்கிறது. 15 இடங்களிலே நாம் படிப்படியாக இதை நிறைவேற்றலாம் என்ற முடிவு எடுத்திருக்கிறோம். அரியலூரைப் பொறுத்த வரையில் அந்த 15 இடங்களைப்பற்றி முடிவு எடுக்கும்போது கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் அரியமங்கலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் பல இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அந்தக் காலி இடங்களையெல்லாம் தொழிற்துறையில் ஊக்கம் அளிக்கும் வகையில் மற்றவர்களுக்கு ஒதுக்கித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, மாவட்ட எல்லைக்குள் சில தொழிற்பேட்டையிலே அதிகமாகத் தொழில் தொடங்க தொழிலதிபர்கள் முன்வரவில்லையென்ற குறை இருக்கிறது. இந்தக் குறைகளை நீக்க அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் (பேக்வர்ட் ஏரியா) தொழில் தொடங்கினால் சில சலுகைகள் கொடுக்கலாம் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. உதாரணமாக, தொழிலதிபர்களுக்கு மின்சார சலுகை அளித்தல், நிலத்தின் விலை, வாடகை, சலுகை அளித்தல் நீண்டகால கடன் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வது என்ற சலுகைகள் அளிக்கலாம் என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கட்டப்பட்டிருக்கிற தொழிற்பேட்டைகளில் தொழில் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது கோயில்பட்டியில் தொழிற்பேட்டை மூன்று, நான்கு ஆண்டுகளாக சும்மா இருக்கிறது. அந்த இடத்தில் அரசாங்கமாவது சில தொழில்களை ஆரம்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். நம்முடைய தொழிற்கொள்கையை செயல்படுத்தி வருகிறோம். சில இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க முன்வரவில்லையென்ற காரணத்தால் என்ன திட்டங்கள் செய்யலாம் என்பதை யோசித்து வருகிறோம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கதர் விற்பனை

■ 261 வினா—**திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1969-ம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தீபாவளியை முன்னிட்டு கதர் விற்பனையில் முதல் இடம் வகிக்கும் ஊராட்சி ஒன்றியம் எது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குளித்தலை.

1970 மார்ச் 7]

திரு. வை. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே தீபாவளியின்போது எவ்வளவு ரூபாய்க்கு கதர் விற்பனையானது ? தமிழ்நாட்டில் எந்தப் பஞ்சாயத்து யூனியன் கதர் விற்பனையில் முதன்மையாக இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த தகவல் இருக்கிறது. இரண்டு அபி விருத்தி மாவட்டங்கள். ஒன்று திருச்சி, மற்றொன்று கரூர். திருச்சிராப்பள்ளி அபிவிருத்தி வட்டத்தில் தீபாவளியின்போது மொத்தக் கதர் விற்பனை ரூபாய 6,14,905.04 ; கரூர் அபிவிருத்தி வட்டத்தில் விற்பனை ரூபாய் 5,60,986.74 ; குளித்தலை ஊராட்சி ஒன்றியம் விற்பனையில் முதல் இடத்தைப் பெறுகிறது. அதன் விற்பனை ரூபாய் 1,04,509.61 ஆகும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தீபாவளியின்போது கதர் வாங்கித்தான் தீர வேண்டுமென்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சிப்பந்திகளைக் கட்டாயப்படுத்தி யிருப்பது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிக் கட்டாயப்படுத்தாமலிருக்க அரசால் என்ன முடிவு எடுக்கப்பட் டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஓருசில இடங்களில் இருந்து அப்படிக் கட்டாயப்படுத்தியதாகப் புகார் வந்தது. அப்படிப் புகார் வந்தவுடனேயே, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்குத் தந்திமூலம், அப்படி யாரையும் கட்டாயப் படுத்தக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கதர் உற்பத்தியில் செய்துள்ள மாறுதலையொட்டி, பலர் விரும்பிக் கதர் வாங்குகிறார்கள். கதர் நல்ல விற்பனையாகி யிருக்கிறது. யாரையும் கட்டாயத்திற்குள்ளாக்கவில்லை.

லால்பகதூர் சாஸ்திரியவர்களின் உருவச்சிலை

*** 262 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமரர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் உருவச் சிலையை எழுப்புவதற்கு அனுமதி கேட்டிருந்த கோயம்புத்தூர் நகராட்சிக்குத் தமிழ்நாடு அரசு அனுமதி மறுத்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) நகராட்சி நிதியிலிருந்து சிலை எடுக்கும் செலவை அனுமதிப்பதில்லை என்ற பொதுக் கொள்கையின் காரணமாக அனு மதி மறுக்கப்பட்டது.